விலை ரூபா 1—25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 , மாசி 14 ஜ- ஆகி 4 இதழ் 15
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 25-2-1985

## கடத்தப்பட்ட முல்லைத்தீவு அரச அதிபர்

# ஞானச்சந்திரன் சுட்டுக்கொலை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் நேற்றுக் காலை சுடப்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார்.

## இரணைமடுச்சந்தி பஸ்தரிப்பில் சடலம் கண்டுபிடிப்பு

கண்டி வீதியிலுள்ள இரணைமடுச் சந்தியிலுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் சூட்டுக்காயங்களுடன் இவரது சடலம் உட்கார்ந்த நிலையில் காணப்பட்டது. தலையின் இடது பக்கத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

கடத்தப்படும்போது அணிந்திருந்த மண்ணிற காற்சட்டையும், வெள்ளைநிற சேர்ட்டும் கசங்காத நிலையில் அவரது உடலில் காணப்பட்டன.

இவரது சடலத்தை சகோதரர் திரு.கே. பூரணச்சந்திரன் அடையாளம் காட்டினுர். கிளிநொச்சி அரசாங்கஅதிபர் திரு. என். ஜெயநாதன் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்து சடலத்தை கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

(6-ம் பக்கம் 3-ம் கலம் பார்க்க)

## இனப்பிரச்னைக்கு நடவடிக்கை இல்லையெனில்

# பிராந்தியத்தில் பதற்ற நிலை உருவாகும்!

## இலங்கைக்கு இந்தியாவின் அறிவுறுத்தல்

### தூதுவர் திலகரத்ன கொழும்பு விரைந்தார்

(புதுடில்லி)

**இனங்கையின் இனப்பிரச்னை தொடர்பாக உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க இலங்கை அரசு தவறுமானுல் நிலைமை கட்டுமீறிப்போய் இந்தப் பிராந்தியத்தில் பதற்றநிலை உருவாகும் என்று இலங்கை அரசுக்கு இந்திய அரசு தெரிவித்திருப்பதாகத் தெரியவருகின்றது.**

**இதேசமயம் இந்திய அரசின் கருத்துக்களை இலங்கை அரசிடம் தெரிவிப்பதற்காக இந்தியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் திரு.பேர்னுட் திலகரத்ன கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.**

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொடுமைகளை நிறுத்த பயனுள்ள உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இலங்கையிடம் இந்தியா வற்புறுத்தியுள்ளது என புதுடில்லியில் அறிவிக்கப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்னை குறித்து இலங்கை ஜனுதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனுவுடன் ஆலோசனை நடத்துவதற்காக இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரத்ன புதுடில்லியிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்னை தீவிரமாகி வருவது கவலைக்குரிய விடயமென்றும், இலங்கையின் இனப்பிரச்னைதொடர்பாக உடனடி நடவடிக்கைகளை எடுக்க இலங்கை அரசு தவறினுல், நிலைமைகட்டுமீறிப்போய் இப் பிராந்தியத்தில் பதற்றநிலை உருவாகுமென்றும் திரு. திலகரத்னவிடம் இந்திய அரசு தெரிவித்துள்ளது என அறிவிக்கப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்னை குறித்து திரு. பேர்னுட் திலக

(6ம் பக்கம் ம் 4கலம் பார்க்க)

## காவல் அதிகாரி சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி பாதுகாவல் உத்தியோகத்தர் ஜே. எல். எச் சில்வா இனந்தெரியாத இளைஞர்களால் நேற்று முன்தினம் மாலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

★

**அரிசி, நெல் கொள்ளை**

மட்டக்களப்பு மண்டபத்தடியிலுள்ள கமநலசேவை நிலையததில் இருந்து அரிசி, நெல் மற்றும் விவசாயப் பொருட்களை இனந்தெரியாத இளைஞர்கள் கொள்ளையடித்துச் சென்றனர்.

★

கல்வித் திணைக்களத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

## "கண்களைக் கட்டி அழைத்துச் சென்றனர்"

### விடுவிக்கப்பட்ட கிருபதிலகன் தகவல்

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் கே. ஞானச்சந்திரன்கடத்தப்பட்ட சமயத்தில் அவருடன் சென்ற திட்டமிடல் மேலதிகப் பணிப்பாளர் திரு. கிருபதிலகன் விடுவிக்கப்பட்டு நேற்றுக்காலை வீடுவந்து சேர்ந்தார்.

நேற்று அவர் யாழ்ப்பாணத்திலுள்ள திரு. ஞானச்சந்திரனின் இல்லத்திற்குச் சென்றபோதே அவர் மரணமாகிவிட்டதை அறிந்து கொண்டதாக கூறப்படுகிறது.

இவர் நேற்றுக்காலை யாழ். அரசாங்கஅதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்துடன் தொடர்பு கொண்டார்

(6ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## பணம், ஆயுதம் எடுத்துச் சென்றனர்

[கொழும்பு]

புளியங்குளத்தில் 8 பொலிஸாரை கொன்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் பொலிஸாரிடமிருந்து 77ஆயிரம்ரூபா பணம் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் ஆயுதங்கள் யாவும் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது [சு]

## கண்ணிவெடி முன்கூட்டியே வெடித்ததால் ஆபத்தில்லை !

(கொழும்பு)

மன்னுரில் இராணுவத்தினருக்கு வைத்த கண்ணிவெடி முன்கூட்டியே வெடித்ததினுல் இராணுவத்தினருச்கு ஆபத்து ஏற்படவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

பின்னர் பயங்கரவாதிகள் 'ராக்கெட்' தாக்குதலை மேற்கொண்டதாகவும் இதில் இரு இராணுவ வீரர்களுக்கு சிறிய காயமேற்பட்டதாகவும் அரசு அறிவித்துள்ளது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

## பலாலிக்கு மாற்றும்படி கோருகிறுர்கள்

(கொழும்பு)

நீர்கொழும்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றுவரும் வட பகுதியைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்கள் தம்மை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு மாற்றும்படி கோரிககை விடுத்துள்ளனர்

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை இவ் ஆசிரியர்களின் கோரிக்கை தொடர்பாக கல்வி அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

பாதுகாப்பு மற்றும் பயணச் சிக்கல்கள் காரணமாக இவ் ஆசிரியர்களை வட பகுதிக்கே மாற்றுவது உதவியாய் இருக்கும் எ திரு இராசதுரை கல்வி அமைச்சருக்கு கடிதம் எழுதியிருப்பதாய் தெரிகின்றது.

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஆசிரியர் ஒருவர் பலியானதாகவும்இவரது சடலம்யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளான பல்கலைக்கழக மாணவர் ஒருவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்சாக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கூட்டணியைத் தடைசெய்ய சில அமைச்சர்கள் கோரிக்கை

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியை தடை செய்யவேண்டும் என்று அமைச்சர்கள் சிலர் அரசாங்கத்தக்கு ஆலோசனை கூறியுள்ளார்கள்.

இலங்கை மீது இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று இந்தக் கட்சியின் தலைவர்கள் அண்மையில் விடுத்த கருத்துத் தொடர்பாகவே இக்கட்சியை தடை செய்ய வேண்டும் என்று இவர்கள் சிபார்சு செய்துள்ளார்கள்.

அமிர்தலிங்கம் வெளியிட்ட மேற்படி கருத்து தொடர்பாக வரும் புதன்கிழமை அமைச்சரவை அறிக்கையொன்றை வெளியிடவுள்ளது.

உத்தேச அறிக்கை தொடர்பாக இந்தியாவிலுள்ள இலங்கை தூதரகத்திடம் இலங்கை அரசாங்கம் விரிவான அறிக்கையொன்றையும் கோரியுள்ளது, (சு)

## 'அமிர்'மீது வழக்கு?

# ஜே.ஆர்.ஆலோசனை

[கொழும்பு]

பங்களாதேஷ் போன்று இலங்கை விடயத்திலும் இந்தியா நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்த கருத்து தொடர்பாக அவர் மீது வழக்குத் தொடர்வது பற்றி ஜனுதிபதி ஜெயவர்த்தனு சட்டமா அதிபர் சிவா பசுபதியின் ஆலோசனையை நாடியுள்ளார்.

அண்மையில் சென்னையில் அவர் தெரிவித்த இந்தக் கருத்துத் தொடர்பாக என்ன முறையில் வழக்குத் தாக்கல் செய்யலாம் என்பது பற்றியும் அவர் ஆலோசித்து வருகிறுர்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 6-வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமிர்தலிங்கம் மீது வழக்கு தொடரலாம் என நம்பப்படுகிறது.

## சிறில் மத்தியூ விசாரணை

(கொழும்பு)

முன்னுள் அமைச்சர் திரு. சிறில்மத்யூ இரகசியப் பொலிசாரினுல் விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

இனக்குரோதங்களைஏற்படுத்தக் கூடிய சில பிரசுரங்களை அச்சிட்டது தொடர்பாகவே இவர் விசாரணை செய்யப்படுகிருராம்.

## இலங்கை அகதிகளுக்கு மருத்துவ வசதிகள்

சென்னை, பெப். 24

ராமேஸ்வரம், மண்டபம் ஆகிய முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு தமிழ்நாடு அரசு மருத்துவ வசதிகளை அளித்து வருகிறது.

இவர்களுக்கு மருத்துவ வசதிகளை அளிப்பதற்காக டாக்டர்களையும், மருத்துவ தாதிகளையும் கொண்ட குழுவொன்று இரு அம்புலன்ஸ் வண்டிகளில் அனுப்பிவைக்கப் பட்டதாக தமிழ்நாடு சுகாதார அமைச்சர் டாக்டர் எச்.வி ஹண்டே.

(2ம்- பக்கம் 1-ம் கலம்பார்க்க)

## ரி விளம்பரம்

### விற்பனைக்கு

யூரியா உரம் விற்பனைக் குண்டு. M. G. M. For age Stores, No 208, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22611 1839

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினுல் கல் அரித்து தயாரிக்கப்படுபவை வர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

சகலவிதமான ஹோட்டல் தளபாடங்களும் உடன் விற்பனைக்கு உண்டு. விபரம் கீழ் வருமாறு: (1) டி பிறிசர் ஐஸ் பெட்டி (2) திண்டுக்கல் இரும்புப்பெட்டி (3) சீலிங் விசிறிகள் (4) மேசை விசிறிகள் (5) பெரிய கவுண்டர்கள் (6) சோ கேஸ் வகைகள் (7) குசினி தளபாடங்கள் (8) சாப்பாட்டு மேசைகள் மற்றும் ஏனைய ஹோட்டல் தளபாடங்கள் அடங்கிய யாவும். நேரில் பார்வையிடவும் கா. பாலகிஸ்ணபிள்ளை, மின்சாரநிலையம், ஸ்ரேசன் ரோட், மாங்குளம். 1941

தாவடி மானிப்பாய் வீதியில் பத்திரகாளி கோவில் அருகாமையில் (பிரதான வீதியில் இருந்து 200 யார்) 19 பரப்பு மேட்டு நிலக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விவசாயம், விலங்குப்பண்ணை, மற்றும் ஆலைகள் அமைப்பதற்கு சிறந்தது முகவரி; அ. ஸ்ரீகரன், ''சுதுமலை வைத்தியம்'', சுதுமலை, ஆனைக்கோட்டை. 1971

மின்சார உபகரணங்கள் உட்பட பலதரப்பட்ட வீட்டுச் சாமான்கள் உடனடியாக விற்பனைக்கு உண்டு. அன்ரனிப்பிள்ளை, 9/3, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். 1964

பாண், பணிஸ், கேக் முதலியன செய்வதில் அனுபவமுள்ள பேக்கர்கள் தேவை. நேரில் வரவும். மலேயன் ரேடியோ சேவிஸ், 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்; 23885. 1969

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் ஒன்றரைப் பரப்புக் காணியும் சகல வசதிகளுடனும் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு இ. சங்கர், 428, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23853 1935

நெல் வயல் 5 ஏக்கர் (ஒரு போகம்) 1ம் கட்டை புதுக்குடியிருப்பு வீதி பரந்தனில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல: 9, 'விக்ரர் போட்டோ ஸ்ரட்ஸ்' மேல்மாடி நவீன சந்தை, சாவகச்சேரி. 1994

1983, 1984 பழைய Readers Digest தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல. 1970, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [1970]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### இலங்கை...

(1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இம்மருத்துவ வசதிகள் குறித்து இலங்கை அகதிகள் திருப்தி தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் ஹண்டே கூறினார்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் T. K. இராஜரெத்தினம்

(P. S. டிஸ்பென்சரி உரிமையாளர்)

மலர்வு: 6-10-1921 உதிர்வு: 28-01-1985



அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் (27-2-1985) புதன்கிழமை நடைபெற இருப்பதால் அனைவரும் சமுகமளித்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

அன்னார் சிவபதம் அடைந்த செய்திகேட்டு நேரில் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள். உறவினர்கள்.
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1999

## ஓராண்டு நினைவஞ்சலி

### சு. சோமாஸ்கந்த சர்மா

மண்: 01-12-1958
விண்: 08-03-1984



வாசமுள்ள மலராக
பாசம் சிந்தி
நேசமிகும் தென்றலாய் நெஞ்சைத்
தொட்டு
வட்டமிட்டே
விட்டகலா அன்பினை ஈந்து
இடைநடுவினிலே
எமைவிட்டுச்
சென்ற
சோமாஸே
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்,

அண்ணு, அண்ணி, அத்தான்மார்,
அக்காமார், தம்பி, மற்றும்
நண்பர்கள், உறவினர்கள்

484, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 25-02-85. 1979

உ

## ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி நாகரத்தினம் தம்பாப்பிள்ளை

மலர்வு: 11-06-1907 உதிர்வு: 25-02-1984
திதி: 15-03-1985



''பார்மக்காள், ஊர்போற்றும்படி
பாங்கான பாதையில் உம்மை வைப்பேன்''
என்றாய் எங்கள் அம்மா!
உம்மை எங்கு காண்போமோ.

ஓராண்டு ஓடிவிட்டது உங்கள்
நினைவு ஒன்றிவிட்டது.
சாந்தி-சாந்தி-சாந்தி எனவேண்டும்.

அன்புப்புதல்விகள், கனகராணி,
இந்திராணி, சுதேசராணி

15-ம் கட்டையடி, உடுப்பிட்டி. 1747

## "Ministry of Intercession"

உங்கள் பிரச்சனை - தேவைகள் - கவலைகளுக்கு ஜெபத்தின் மூலம் ஜெயம் பெறவும் ஆலோசனைகளுக்கும் தொலைபேசி மூலமும் நேரிலும் தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி: யாழ்ப்பாணம் 22043
இல: 22 பூங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
1967

## தெங்கு பனம் தும்பு பதனிடும் தொழிற்சாலை

### பூநகரி

பூநகரி பரம்பங்கிராயில் சித்திரை மாதம் உற்பத்தி ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைக்கு மர்தாந்தம் ஐந்து இலட்சம் தென்னம்பொச்சு, கங்குமட்டை உற்பத்திக்கு தேவைப்படுகின்றது. பளை இயக்கச்சி, வெட்டுக்காடு தீராஞ்சி கௌதாரிமுனை முதலிய இடங்களிலிருந்து லொறி, உழவுயந்திரம் வண்டில் மூலம் விநியோகிக்க விபரங்கள் கோரப்படுகின்றன. மாதாந்தம் விநியோகிக்கக் கூடிய தொகை விலை விபரங்களை பதிவுத் தபால் மூலம் தெரிவிக்கவும்.

### Coconut and palmarah Fibre Industries

PARAMPANKIRAI POONKARY (1976)

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி

### கந்தையா மதியாபரணம் [மதி]

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன
உப அஞ்சல் நிலையம் (மண்டைதீவு)

மலர்வு: 20-05-1951

உதிர்வு: 25-02-1982



மதிமுகமே ஒளிவிளக்கே
எமது இல்லத்தின்
உயிர்நாடியே
அனைவரையும் அன்புசெய்த
தெய்வப் பிறப்பே
கடமைக்குச்சென்ற
உம்மைக்
காலனவன் கவர்ந்தானே
உம் பிரிவால் நாம் எல்லாம்
செயல் இழந்து
வருந்துகின்றோம்

உமது நினைவு எம்மைவிட்டு என்றுமே அகலாது. உமதான்மா இறைவனில் அமைதியடைய வேண்டுகிறோம்.

உமது பிரிவால் வருந்தும்
பெற்றோர், சகோதரர்,
மச்சான், மாமன்மார்,
உறவினர்.

28, ஆசிர்வாதப்பர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
1995

காலஞ்சென்ற

## வேலாயுதபிள்ளை வடிவேற்கரசு

Retd. Regiment Sergent Major (Ceylon Army)

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 18-2-85 ஈழநாட்டில் அறிவித்தபடி 19-2.85 அன்று கீரிமலையில் நடந்தேறியது.

வ. வேலாயுதபிள்ளை
கரம்பன் மேற்கு. ஊர்காவற்றுறை.
2004

## மரண அறிவித்தல்

### திருமதி H K. BONNEY

திருமதி ஹெலன் குலக்கொழுந்து இங்கிலாந்தில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் காலஞ்சென்ற திரு. T. P BONNEYயின் அன்பு மனைவியும், ரதி. ராணி. ரஞ்சிதம், பாலேந்திரா, இந்திராணி(இங்கிலாந்து), ஜெயபாலன் (இங்கிலாந்து), ஜெயசீலன்(இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வராசையா, விஸ்வலிங்கம், ஜீவராஜ், சுபத்திரா, நல்லையா (இங்கிலாந்து), ஈஸ்வரி (இங்கிலாந்து), கௌரி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இங்கிலாந்தில் நடைபெறும் உற்றார், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

S. ஜீவராஜ், 34, றக்கா ஒழுங்கை,
சுண்டிக்குளி. 2001

### மணிவாக்கு

ஒன்றுமில்லாத ஏழை மக்களின் எளிய பக்தியில் இறைவன் பெருமகிழ்வுகொள்கிறன். பிண்ணுக்கோடு கலக்கப்பட்ட வைக்கோலைப் பசு ருசித்துச் சாப்பிடுகிறது. —ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

# லங்கா தகனம் படமா பாடமா?

யாழ்ப்பாணத்தில் மிகத் தீவிரமாகத் தொடரும் கொள்ளையும் கொலையும்அரசியல் மயமானதால், கட்டுப்பாடுள்ள ஆட்சி இங்கு நிறுவினுலொழிய இந்த அழிவு நிலை முடிவடையாது

வடபகுதியில் பல கிராமங்கள் காலியாகிவிட்டதும்; ராணுவத்தின் அட்டூழியத்தால் உயிரையாவது பாதுகாப்போமெனத் தினசரி நூற்றுக்கணக்கான மக்கள் கடல் கடந்து ராமேஸ்வரம் செல்வதும் காதை அடைக்கும் செய்தி.

புள்ளிவிபரங்களில் தவறிருக்கலாம்; சொந்தஊரை விட்டு கடல்கடக்கும் நிர்ப்பந்தம் பெருமளவில் தொடருமானல் அதன் அர்த்தம் புரியமுடியாத அரசு ஆளுந்திறனை இழந்துவிட்டதென்பது முடிவு.

ராமாயணத்தில் நாம் படிப்பது அனுமானுக்கு ராமநாமத்தில் உண்டான அசையாத நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் வலிமையால்தான் ராமருடைய பெயரைக்கூறியபடியே கடலைத்தாண்டினன். ஆனல் ராமருக்கோ பாலம் கட்டிக் கடலைக் கடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தியாவைச் சில நூற்றுண்டுகளாக ஆண்ட பிரிட்டிஷார் அங்கு ஒரு ராம ராச்சியத்தை ஏற்படுத்த முனையவில்லை. ஆனல் பாரதியார் பாடியதுபோல் சிங்களத் தீவுக்கு ஒரு பாலம் அமைக்கத் திட்டமிட்டிருந்தனர்; சேது சமுத்திரம் என்று சொல்லப்படும் கடற்பிரதேசத்தில் பாலம் அமைப்பது சாத்தியமானது; இருப்பினும் இலங்கையையும் இந்தியாவையும் பிரித்தாள்வது இலகுவானதால் அத்திட்டத்தைக் கைவிட்டிருந்தார்கள்.

உலக மகாகவி பாரதி குறிப்பிடும் பாலம் கலாசார பாலம். எந்நாட்டிலிருந்தாலும், தமிழ்மக்கள் நெஞ்சில் தமிழார்வம் குடிகொண்டிருத்தல் வேண்டுமென்பதும், அங்கெல்லாம் தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு என்பதும் நிலைநாட்ட வேண்டுமென்பதும் பாரதியாரின் கருத்து.

இந்த கலாசார பாலத்துக்கு கள்ளத்தோணிஎன்ற கருத்து களங்கம் விளைவித்திருக்கிறது. இன்றுஇலங்கை வாழ் தமிழ் மக்கள் சொந்த நாட்டில் அகதிகளாகும் நிலை; அந்தநிலையே மோசமடைந்ததால் எவ்வித பாலமுமின்றி அனுமானைப் போல ஆண்டவனில் கொண்ட நம்பிக்கையின் பலத்தில் இலங்கைத் தமிழர் ராமேஸ்வரத்தை அடைகின்றனர்.

இந்த 'அனுமான்கூட்டம்' உயிரைப்பாதுகாக்க அங்கு செல்ல இலங்கை கடற்படை பாதுகாப்பு வலயம் தடையாகவிருக்கவில்லை; இந்தியாவிலிருந்து இங்கு வரும் 'வானரங்கள்' இந்நாட்டை ஆக்கிரமிக்கிருர்களென்று இலங்கை அரசு ஓயாது முழக்கமிடுகிறது; போருக்குஆயத்தமாகிறது.

இதனல் நாம் எங்கு செல்கிறேமென்பதை அறியமுடியாது தத்தளிப்பது இலங்கை அரசுக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் உரித்தான ஒரே அபாயம்.

இந்த நாடு சிங்கள மக்களுக்கே உரித்தானதென்ற கொள்கை, அவர்களுக்கு வேறு புகலிடமில்லையென்பதால் உறுதிப்படுகிறது. இலங்கைத் தமிழ் மக்களுக்கு இங்கு வாழும் உரிமை இல்லாவிட்டால், தாய்மொழி தமிழ் என்ற காரணத்தால் தமிழ் நாடு சொந்த நாடு என்ற உரிமை கோரலாமா?

இங்கிலாந்து மக்களுக்கு அபாயம்ஏற்பட்டால் அமெரிக்காவில் குடியேறலாமா? ஆங்கிலம் என்ற பொது மொழியால் பிரிவினைப்பட்டிருக்கும் இரு நாடுகள் அமெரிக்காவும் இங்கிலாந்தும் என்கிறர் அறிஞர் ஷா; ஆழமான உண்மை இது.

உழுத்துப்போன அரசியல் கருத்துக்களில் தொடர்ந்து நம்பிக்கை கொள்வோமானல் சுதந்திர நாடாகத்தொடர்வது கடினம். இதனைஉணர மறுத்தால் உணரும் நிர்ப்பந்த நிலை ஏற்படும்.

இந்த நாட்டில் வாழும் மக்கள் எவருக்கும் ஏக போக உரிமை கிடையாது. தமிழர்கள் இங்கிருந்து துரத்தப்பட்டால் அது உள்நாட்டுப் பிரச்னையாகாது. வெளிநாடுதானும் தலையிட வேண்டிய அவசியமிராது! வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும் அள்ளிக் கொண்டுபோகும். இதற்கு இன்று போதிய அறிகுறி உண்டு.

ராமர் — ராமேஸ்வரம், அனுமான் இம் மூன்றும் என்றென்றும் வாழும் அரசியல், சமய, சமுதாய கருத்துக்கள்.

லங்கா தசனம் என்பது ஒரு பேசும் படம் மட்டுமல்ல; அதனைப்பார்ப்பவர்கள் அதுஒரு நல்லபாடமென்பதை உணர்வார்கள். இந்த நாட்டில் இன்றைய அபாயம் அழிவுக்கு இட்டுச்செல்லாது தடுக்க வல்லது அப்பாடம்.

## தவக்கால சிந்தனை



### 6-ம் நாள்

''பசியாயிருந்தேன், எனக்கு உண்ணக் கொடுத்தீர்கள் தாகமாயிருந்தேன், எனக்கு குடிக்கக்கொடுத்தீர்கள், அன்னியனய் இருந்தேன் என்னை, வரவேற்றீர்கள்'' (மத் 25/35) நாம் பிறர் சார்பாகச் செய்கின்ற ஒவ்வொரு செயலும் இறைவன் சார் வினைவாக மாறுகின்றது. பிறருக்கு நாம் நன்மை செய்யும் பொழுது இறைவனை மகிமைப்படுத்துகின்றேம். தின்மைசெய்கின்ற பொழுது இறைவனைப் பரிகசிக்கின்றேம்.'' சின்னஞ் சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள் (மத்.25/40) எனவே, பிறர்கரிசனை,கருணை, விருந்தோம்பல், தியாக சிந்தை போன்ற நற்பண்பாடுகளில் வளர்வதன் மூலம் இறைவனை மையமாகிக் கொண்ட வாழ்க்கையினை மலரச் செய்வோம்.

வண. வின்சென்ற் பற்றிக்,
அ. ம. தி

# தேசிய அடையாளஅட்டைக்கு விண்ணப்பிப்பது எப்படி?

## அரசஅதிபர் தெரிவித்த விளக்கம்

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் முறை, விபரங்கள் பற்றி யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் கேட்டகேள்விகளுக்கு அவர் தெரிவித்த பதில்கள் கீழேதரப்படுகின்றன.

கேள்வி: எத்தனை வயது பூர்த்தியான பின்னர் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கவேண்டும்?

பதினறு வயது.

கே: அடையாள அட்டையைப் பெறுவதற்கு யார் தகுதியுடையவர்கள்?

விசா வைத்திருப்பவர்கள். வதிவிடபத்திரம் வைத்திருப்பவர்கள் விசா இல்லாமல் இருக்கக்கூடியவர்கள் கள்ளக்குடியேற்றக்காரர். கால எல்லைகடந்து வசிப்பவர்கள் முதலியோர் தவிர்ந்த ஏனையோர் பதினறு வயது பூர்த்தியடைந்ததும் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்

கே: விண்ணப்பிப்பதற்கு எத்தனை விதமான விண்ணப்பப்படிவங்கள் உள?

மூன்று.

முதல் முறையாக புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல்- படிவம் ''ஆ'' ஆபதி/வி/ 1- வெள்ளை அல்லது மஞ்சள்.

அடையாள அட்டையை தொலைத்தவர்கள் பிரதி அட்டைக்கு விண்ணப்பித்தல் படிவம் ''உ'' ஆபதி/ வி/ 7- பச்சை.

சேதப்பட்ட/ உருவழிக்கப்பட்ட/ தெளிவற்ற/ மாற்றங்கள் செய்யவேண்டியவற்றிற்கான பிரதி அட்டைக்கு விண்ணப்பித்தல்- படிவம் ''ஊ'' ஆபதி/ வி/ 8. சிவப்பு (பிங்)

கே: அடையாள அட்டையைப்பெறுவதற்கு யாருடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்?

கிராமசேவை அலுவலருடன்;பாடசாலை மாணவர்கள்- அதிபருடன்.

கே: அடையாள அட்டையைப்பெறுவதற்கு என்ன என்ன ஆவணங்களை/ பத்திரங்களை கிராமசேவை அலுவலகரிடம் சமர்ப்பிக்கவேண்டும்?

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்- முழுமூலப்பிரதி புகைப்படங்கள் மூன்று. பெற்றேரின் அடையாள அட்டைகள். விண்ணப்பதாரி பெண்ணுயின் விவாக அத்தாட்சிப்பத்திரம். பதிவுப்பிரசையாயின் பிரஜாவுரிமைச்சான்றிதழ். இந்திப் பிரசையாயின் உணவு முத்திரை,/ இந்தியா/ அவசரகால கடவுச்சீட்டு, தோட்டப்பற்றுச்சீட்டு முதலியன இருப்பின்.

கே: எத்தனை ரூபா முத்திரை விண்ணப்பத்தில் ஒட்டி இரத்துச் செய்யப்படல் வேண்டும்?

புதிய அடையாள அட்டைக்கு பதினறு வயதிற்கும் பதினேழு வயதிற்கும் இடைப்பட்டவர்கள். ரூபா மூன்று. பதினேழு வயது பூர்த்தியடைந்தவர்கள். ரூபா 13-,

பிரதி அடையாள அட்டைக்கு எல்லோரும் ரூபா. 15-/

கே: இதற்கான புகைப் படங்கள் எங்சே எடுக்கவேண்டும்?

ப: திணைக்களத்திஞல் அப்கீசரிக்கப்பட்ட புகைப்படங் பிடிப்பாளர்களின் பட்டியல் தரப்படுகின்றது.

குகன் ஸ்ரூடியோ- பருத்தித்துறை, திரு. பீ சாமிநாதன் இல 127 கஸ் தூரியார் வீதி, யாழ்ப்பாணம். இலெக்றிக் ஸ்ரூடியோ- பண்டத்தரிப்பு சித்திராலயா ஸ்ரூடியோ-

(5-ம் பககம 1-ம் கலம் பார்க்க)

## கல்லூரிக் கொள்ளை நியாயமானது தானு?

''உன்னையே நீ அறிவாய்'' என அறிஞர் சோக்ரட்டீஸ் கூறியுள்ளார்.

ஆனல் இன்றே புனித சம்பத்திரியார் கல்லூரியில் கொள்ளையிட்டவர்களை நாங்கள் கேட்கின்றேம். விடுதலைப் போராளிகளுக்கு ஆதரவு காட்டினர்கள் என்ற காரணத்துக்காக கத்தோலிக்க மதக் குருமார்கள் சிறையில் அடைக்கப்பட்டும் சுட்டுக் கொல்லப் பட்டும் வருகின்றுர்கள். இந்த நிலைமையில் எமது சிறுவர்களின் மகத்தான கல்விக்காக அரும்பாடு பட்டுவரும் மதக் குருமாரால் நடத்தப்பட்டு வரும் கல்லூரியில் இடம்பெற்றுள்ள கொள்ளை சம்பவம் வேதனைக் குரியது. இந்த கொள்ளை சம்பவமானது அந்தக் கல்லூரியின் ஆசிரியர்களின் அயரா உழைப்பினையும், மாணவர்களின் மகத்தான கல்வியையும், பெற்றேர்களின் பெரும் முயற்சியினையும் உடைத்து நொறுக்கிய ஒரு செயலாகும். ஆனதினல் இந்தக் கொள்ளையை நடத்தியவர்களே நீங்கள் செய்த இந்தசெயல் நியாயமானதுதானுஎன்பதை சிந்தித்துப் பாருங்கள்.

-பெற்றேர்
யாழ்ப்பாணம்.

## மக்கள் கருத்து

### வாகனங்களை மெதுவாக ஓட்டுங்கள்

யாழ்ப்பாண வீதிகள் ச[illegible]ந்த காலத்தில் நடந்து போகவோ, வாகனங்கள் ஓடவோ முடியாத மிகவும் சீர்கெட்ட நிலையிலிருந்ததென்பதை எவரும் சொல்லிதெரிய வேண்டியதில்லை இந் நிலையில் பொதுமக்கள் தாங்கள் பாவிக்கும் வீதிகளை தாங்களே சீராக்க முடிவுசெய்து அதற்கேற்ற வகையில் சிரமதான திட்டத்தின்கீழ் எவ்வளவோ இக்கட்டான சூழ்நிலையில் வீதிகளைத் திருத்திமுடித்தும், திருத்திக் கொண்டும்இருக்கும் வேளையில் வாகனங்களை வேகமாகச் செலுத்துவதன்மூலம், மீண்டும் வீதிகளைப் பழையநிலைக்குக் கொண்டு வந்துவிடும் என நாப் பீதியடையவேண்டியிருக்கிறது

இந்நிலையில் மினிவாசனம் ஓடும் சகோதரர்கள் பொது நோக்குடன் வாகனங்களை வீதியில் ஓட்டும்போது மெதுவாக ஓட்டவேண்டுமென தயவன்புடன் கேட்டுக்கொள்கிறேம்.

குறிப்பாக மினிவான்களில் தொகைக்குக் கூடுதலாகப் பிரயாணிகளை ஏற்ற வேண்டாம் எனவும், பிரயாணிகளும் கூட அவசரப்பட்டுக் கூடுதலான பிரயாணிகள் பயணம் செல்லும் வாகனங்களில் பிரயாணம் செய்ய வேண்டாம் என மீண்டும் கேட்டுக்கொள்கிறேம்.

எங்கள் எல்லோரையும் எதிர்நோக்கும் இக்கட்டான இவ்வேளையில் நாம் ஒற்றுமையாகவும், பொதுமக்கள் நலன் கருதியும் செயலாற்றுவது மிகவும் விருப்பத்தக்கது.

ரி. யோகநாதன்
29. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

### ஒய்வூதியம் பெறுவதில் உள்ள கஷ்டம்

ஒய்வூதியப் பெறுபவர்கள் வயது கூடியவர்களும், சுகவீனமானவர்களுமாவர். அப்படிப் பட்டவர்களின் ஒய்வூதியத்தை அவர்கள்பெற அநுபவிக்கும்கஷ்டங்கள் பலவாகும்.

ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு வவுச்சர் உரிய காலத்தில் கிடைப்பதில்லை. ஒய்வூதியம் பெறுபவர்களே கச்சேரி வந்து வவுச்சர் பெறவேண்டியநிலை உள்ளது. இதனல் அவர்களுக்குப் பணச் செலவும் தேக சௌகரியக்குறைவும் ஏற்படுகின்றது.

மக்கள் வங்கிமூலம் ஓய்வூதியம் பெறுபவர்கள் கூடிய கஷ்டங்களை அநுபவிக்கின்றனர். ஒய்வூதியம் பெறுபவருக்கு வவுச்சர் உரியகாலத்தில் கிடைப்பதில்லை. கிளை வங்கிக்கு காசோலையும் பெயர்ப் பட்டியலும் உரியகாலத்தில் கிடைப்பதில்லை. இதனல் கிடைத்த வவுச்சரை வங்கியில் போட முடியாதிருக்கின்றது. இதைப்பற்றி யாழ். கச்சேரியில் வந்து ஒய்வூதியப் பகுதியில் விசாரணைசெய்தால் அவர்கள்எல்லாம் அனுப்பப் பட்டுவிட்டதாகக் மக்களை அனுப்புகின்றனர். கச்சேரியில் கணக்காளர் அரசாங்க அதிபர் அவர்களை சந்திக்க முடிவதில்லை.

21 2-1985 ல் ஒய்வூதியம் பெறும்குழு ஒன்று அவர்களை சந்திப்பதற்கு சென்றும் அவர்கள் இன்மையால் முடியவில்லை சாதாரணமாக ஒருவர் ஒய்வூதியம் பெறுவதற்கு குறைந்தது 6 நாட்கள் கச்சேரிக்கும், வங்கிக்கும் பிரயாணம் செய்ய வேண்டிய கஷ்டம் ஏற்பட்டுள்ளது. கச்சேரி ஒய்வூதியக் கிளை நிர்வாகிகள் உரியகாலத்தில் வவுச்சர்களையும் வங்கிக் காசோலைகளையும் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கும், வங்கிக்கும் முறையே அனுப்பி வைத்தால் இக்கஷ்டம் பெரும்பாலும் குறைந்துவிடும். ஒருவருடைய பென்சன் வவுச்சரை இன்னொருவருடைய விலாசத்திற்கு சில சமயங்களில் அனுப்பி விடுகின்றனர். இதனல் இருவரும் பென்சன் எடுக்கமுடிவதில்லை. இந்தக் கஷ்டங்களையும் நிவர்த்திக்க வேண்டுகிறேம்.

ஒய்வூதியம்பெறும்
ஒருவர்

### பீக் மாகாண துப்பாக்கிச்சூட்டின் எதிரொலி:

## ராஜஸ்தான் முதலமைச்சர் ராஜினமா!

# புதிய முதல்வர் பதவிஏற்ருர்!

(ஜெய்பூர்)

ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் திரு சிவ்சரன் மாத்தூர் ராஜினமா செய்துவிட்டார். அண்மையில் சுயேட்சை வேட்பாளரும் மற்றும் இருவரும் இறந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாகவே இவர் ராஜினமா செய்தார்.

நேற்று முன்தினம் இவர் தமது ராஜினமாவை கவர்னரிடம் கையளித்தார்.

கடந்த வியாழக்கிழமை 'பீக்' மாகாணத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 31 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவரும் தற்போதய சுயேட்சை வேட்பாளருமான மான்சிங் என்பவரும் மற்றும் இருவரும் இறந்த சம்பவத்துக்கு தான் தார்மீகப் பொறுப்பு ஏற்பதாகவும், நேர்மை, நியாயம் நிறைந்த இந்தியாவின் பாரம்பரிய ஜனநாயகத்தை பாதுகாக்கும் பொருட்டே தாம் ராஜினமா செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே ராஜஸ்தானின் புதிய முதலமைச்சராக முன்னுள் வருவாய்துறை அமைச்சர் கிராலால் தேவபுரா நேற்று முன்தினம் இரவு பதவி ஏற்றுக்கொண்டார். இவருடன் கூடவே ஏனைய மூன்று அமைச்சர்களும் பதவி ஏற்றனர்.

இத்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக மாநில அரசு நீதிவிசாரணை ஒன்றுக்கும் உத்தரவிட்டுள்ளது. (சூ)

## தமிழ்நாடு சட்டசபை

# இன்று கூடுகிறது

[சென்னை]

தமிழ்நாடு சட்டப்பேரவை இன்று காலை 10 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக கூடுகிறது.

இன்று கூடும் சட்டசபையில் டிசம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார்கள்.

சட்டசபைக் கூட்டத்தை நடத்துவதற்காகவும், புதிய உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்வதற்காகவும் அண்ணு தி. மு. க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு. பா. உ. சண்முகம் தற்காலிக சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு நேற்று முன்தினம் ஆளுநர் பேரவைஉறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

சபாநாயகர், துணை சபாநாயகர் தெரிவு புதன்கிழமை நடைபெறும். [சூ]

## கடத்தல் நாடகம் முடிந்தது

(பெய்ரூட்)

பெய்ரூட்டிலிருந்து நேற்று முன்தினம் கடத்தப்பட்ட விமானம்சைபிரசுக்குகொண்டு செல்லப்பட்டு திரும்பவும் பெய்ரூட் விமானநிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

விமானத்தை கடத்தியவர் அதை காவலில்லாத ஓடுபாதையில் நிறுத்திவிட்டு தப்பிவிட்டதாகவும், அவர் ஒரு குடியமர்வு பந்தோபஸ்து அதிகாரி எனவும் தெரியவருகிறது.

விமானத்திலிருந்த சுமார் 100 பயணிகளும் விமானம் கடத்தப்படுவதற்கு முன்னரே தப்பிவிட்டனர். (ரா)

# இப்படியும் நடக்கிறது

பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைநகர் மணிலாவில் நாளை 26, நாளைமறுதினம் 27-ம் திகதிகளில், சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் ஆசியப் பிராந்திய மகாநாடுநடைபெறவிருந்தது.

மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு தமிழ் ஆசிரியர் சங்க முக்கிய பிரமுகருக்கும் அழைப்பு வந்தது.

புறப்பட ஆயத்தமானபோது ஒரு தந்தி அவருக்குக் கிடைத்தது. தந்தியில் —

''நாட்டு நிலைமை சரியில்லை. பதட்டமான சூழ்நிலை காரணமாக மகாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது'' என்றிருந்தது.

ஆசியப் பிராந்தியம் என்ருல், பதட்டமான பிராந்தியம் என்றுதான் பொருளா?

-'ஊடுருவி

## நீர்வேலி கொள்ளைப் பொருட்கள்

# திருப்பி ஒப்படைப்பு!

[சுண்டுக்குளி]

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கொள்ளை போன பொருட்களில் பெரும்பாலானவை நேற்றுமுன்தினம் சங்க பாதுகாவலரிடம் இனந் தெரியாத இளைஞர்களினல்ஒப்படைக்கப்பட்டன.

கடந்த மாதம் 28ஆம் திகதி நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 34 ஆயிரம் ரூபாய்கொள்ளையிடப்பட்டது.

24 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஐந்து மூடை சீனி, ஹொர்லிக்ஸ் போத்தல்கள், அங்கர், குளுக்கோஸ், பால்டின்கள் போன்ற கொள்ளையடிக்கப்பட்ட பலவகைப் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் என். சிவசுப்பிரமணிய ஐயர் தெரிவித்தார்.

## அக்கறையற்றவர் செயல்

[கொழும்புத்துறை]

''பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்ததுபோல் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும மாணவ சமுதாயத்தின் கல்வி முன்னேற்றத்திற்காக அரும்பணியாற்றிவரும் கலங்கரை விளக்காகத் திகழும் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இரண்டு லட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டது இனநலனில் அக்கறையற்றவர்களின்செயலே''என்று இக் கல்லூரி ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்கண்டனம் தெரிவித்துள்ளது.

### இலங்கையில் மனித உரிமைமீறல்:

## சர்வதேச தேசிய தேவாலய

# சபை கண்டனம்

(நியுயோர்க்)

இலங்கையின் தற்போதய நிலைகுறித்தும் அங்கு மனித உரிமைகள் பெருமளவில் மீறப்படுவது குறித்தும் சர்வதேச தேசிய தேவாலயங்களின் சபை ஆழ்ந்த கவலைகொண்டுள்ளது.

சென்றவாரம் நியுயோர்க்கில் இச்சபையினரால் கூட்டப்பட்ட கூட்டத்தில் இலங்கையின் நிலைபற்றி ஆராயப்பட்டது

ஜெனிவாவிலுள்ள சர்வதேச நடுவர்கள் குழுவுக்காக இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றிய அறிக்கையொன்றை தயாரித்த டாக்டர் வேர்ஜினியா ஹியாரி அங்கு இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதனைப் பற்றி எடுத்துரைத்தார்.

(சூ)

### ஆவரங்கால் பகுதியில்

## காவலில் இருந்தவர்கள்

# பலர் விடுதலை

(கோப்பாய்)

ஆவரங்கால் பகுதியில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த பாடசாலை மாணவர்கள் உட்பட பெரும்பாலானவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆவரங்கால் சர்வோதய வீதியில் தைமாதம் 9-ம் திகதி பாதுகாப்பு படையினர் நடத்திய பலத்த தேடுதலின் போது பல்வேறு வயதும் பிரிவினையும் சேர்ந்த 46க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்தனர்

இவர்களில் இதுவரை பாடசாலை மாணவர்கள் உட்பட 40 பேருக்கு மேற்பட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெறவிருக்கும் க. பொ. த. சாதாரண பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடசாலை மாணவர்களையும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளையும் உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரசாங்க அதிபரையும் வடபிராந்திய கல்விப்பணிப்பாளரையும், பெற்ருேரும் பொதுஸ்தாபனங்களும் அண்மையில் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டவர்களில் சிலர் தொடர்ந்து காவலில் உள்ளனர். ஏனையவர்கள் எதுவித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. (பெ)

## "அன்பைப் பெற்ற ஆசிரியர்கள்"

(உடுவில்)

'இந்த ஆசிரியர்கள் குழந்தைகளோடு ஒன்று சேர்ந்து, நட்புறவுடன் கற்பித்தலில் ஈடுபட்டமையினுல் தான் மாணவர்களின் அன்பையும் விசுவாசத்தையும் பெற்றனர்.''

நவாலி மகாவித்தியாலயத்தில் பல ஆண்டுகளாக ஆசிரியர்களாக சேவையாற்றி, இளைப்பாறிய ஆசிரியர்களான திரு. எஸ். கனகரத்தினம், திரு. எஸ். என். குழந்தைவேலு ஆகியோருக்கு நடைபெற்ற சேவைநலம் பாராட்டு விழாவில் பேசிய வித்தியாலய அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி மேற்கண்டவாறு கூறினுர்.

நவாலி மகாவித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்ருேராசிரிய அபிவிருத்தி சங்கத்தினர் ஒன்று சேர்ந்து நடத்திய இவ்விழாவுக்கு அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி தலைமைவகித்தார்.

அபிவிருத்தி சங்கத்தின் சார்பில் திரு. நிரஞ்சன் பேசினுர்.

அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. சதாசிவத்தினுல் இளைப்பாறிய ஆசிரியர்களுக்கு பாராட்டுப்பத்திரம் வழங்கப்பட்டது.

# "எமது எதிர்காலத்தை இருளடியாதீர்!"

## ஐக்கிய மாணவர் பேரவை வேண்டுகோள்!!

(யாழ்ப்பாணம்)

''எமது எதிர்காலத்தை இருளடியாதீர்'' என்ற தலைப்புடன் ஐக்கிய மாணவர் பேரவை துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது

பரீட்சைகளைக் குழப்புவது, மாணவர் கல்வி, பாடசாலைச் சாதனங்கள் விடயத்தில் குறுக்கிடுவதுபோன்ற சமூக விரோதச்செயல்களைக் கண்டிக்கும் விதத்தில் இப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் வருமாறு:- அடுப்படி அரிசியிலிருந்து அணுவல்லரசுகளின் ஆயுதப் போராட்டம் வரை அரசியல் எங்கும் வியாபித்துள்ளது என்பதை நாம் அறிவோம், அந்தவகையில் மாணவர்களும் அரசியலால் பாதிக்கப்படுகிருர்கள். அதிலிருந்து தனித்துநிற்கமுடியாதவர்களாகிருர்கள் என்ற வரலாற்று உண்மையையும் நாம் மறுக்கவில்லை. ஆனுல் இந்த உண்மைகளை விளங்கவைத்து மாணவர்களை அரசியலறிவூட்டி 'ஆக்க சக்தி'களாக வளர்ப்பதை விடுத்து அவர்களது பரீட்சைகளைக் குழப்பியும், பாடசாலை உபகரணங்களை கொள்ளையிட்டும், சேதப்படுத்தியும் கல்விக்கு இடையூறுசெய்து மாணவர்களின் மனேநிலையை மேலும் குழப்பி கல்வியைத் துறந்து அரசியலுக்கு வாருங்கள் என அழைக்கும் அர்த்தமற்ற போக்கைத் தான் எம்மால் விளங்கிக் கொள்ளமுடியவில்லை. எந்தச் சரியான பாதையும் தெளிவாக்கப்படாத ஒருநிலையில் அமைதியான அன்ருட வாழ்க்கையை வாழ்ந்து வருங்காலத்தை உருவாக்க தமது கல்வியை கற்று வளர்ந்துகொண்டிருக்கும் மாணவர்களுக்கு இருக்கின்ற ஒரு பாதையையும் குழப்பி விடுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிருேம்.

இனியாவது கடந்த காலங்களில் நடந்தவற்றை மறந்து நடக்கவிருக்கும் பரீட்சைகளைக் குழப்பாமலும், பாடசாலைகளை உயர்கல்வி நிறுவனங்களை கொள்ளையிடாமலும் மாணவர்களின் கல்விக்கு இடையூறு செய்யாமலும் இருக்க சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிருேம். அத்துடன் நடைபெறவிருக்கும க. பொ. த, (சாதாரண தரப்) பரீட்சை ஒழுங்காக நடந்தேற அனைவரது ஒத்துழைப்பையும் நாடுகிருேம்.

(கி)

## தமிழகம் உயிர்ப்பிச்சை

[புதுடில்லி]

பால் உற்பத்தி அளவுக்கு அதிகமாகிவிட்டதென்ற காரணத்தால் மேற்கு ஜெர்மனி அழித்தொழிக்க முடிவுசெய்துள்ள 2 லட்சத்து 60ஆயிரம் பசுக்களில் ஒரு லட்சம் பசுக்களுக்கு உயிர்ப்பிச்சை அழிக்க தமிழக மக்கள் முன்வந்துள்ளார்கள். இவர்களின் விருப்பத்தை தமிழக அரசு ஏற்றுக்கொண்டு மத்திய அரசிடம் தெரிவித்ததையடுத்து, மத்திய அரசு மேற்கு ஜெர்மன் அரசுடன் இது குறித்து தொடர்பு கொண்டுள்ளது.

### உலக கிரிக்கெட்:

# இலங்கை தோல்வி!

[மெல்போர்ன்]

உலக சாம்பியன் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையே மெல்போர்னில் நடைபெற்ற போட்டியில் நியூஸிலாந்து 51 ஓட்டங்களினுல் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 50 ஓவர்களில் 223 ஓட்டங்களை எடுத்தது. இலங்கை 173 ஓட்டங்களை மட்டும்ம எடுத்தது.

உலக சாம்பியன் போட்டியில் 'பி' பிரிவில் இதுவரை நியூஸிலாந்து 3 புள்ளிகளையும் மேற்கிந்திய தீவுகள் 1 புள்ளியினையும் பெற்றது. 'ஏ' பிரிவில் அவுஸ்திரேலியா இந்தியா ஆகியன தலாஇரண்டு புள்ளியினைப் பெற்றுள்ளன.

[சூ]

# தேசிய அடையாள . . . . . .

(3-ம் பக்கம் 5ம் கலத் தொடர்ச்சி) யாழ்ப்பாணம். அசோகா ஸ்ரூடியோ- யாழ்ப்பாணம். ஞானம் ஸ்ரூடியோ- யாழ்ப்பாணம். கொழும்பு ஸ்ரூடியோ- யாழ்ப்பாணம். பிறின்ஸ் ஸ்ரூடியோ- சுன்னுகம். எஸ். கே. எஸ். போட்டோ- காரைநகர். குகன் ஸ்ரூடியோ சாவகச்சேரி. செல்லம்ஸ் ஸ்ரூடியோ- யாழ்ப்பாணம். பாரத் ஸ்ரூடியோ- யாழ்ப்பாணம். சற்குணம் ஸ்ரூடியோ- யாழ்ப்பாணம். அயந்தா ஸ்ரூடியோ- கரவெட்டி.

கே: பெற்ருேரிடம் அடையாள அட்டை இல்லாத இடத்து அல்லது தொலேந்திருக்குமாளுல் பிள்ளேகள் அடையாள அட்டை பெற முடியாதா?

ப: பெறமுடியும். பெற்ருேரும் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கே: வாக்கு விபரங்கள்பெறுவது எப்படி?

ப: கிராமசேவை அலுவலர்களிடம் அவர்சள் பிரிவுக்குரிய விபரங்கள் உள. அவற்றின் மூலம் இவை பெறப்படும். விண்ணப்பதாரிக்கு வாக்கு விபரம் இருப்பின் பெற்ருேரின் விபரங்களோ அல்லது அடையாள அட்டை விபரங்களோ தேவைப்படா. விண்ணப்பதாரி வாக்காளராக இல்லாத விடத்து பெற்ருேரின் வாக்கு விபரம் / அடையாள அட்டை விபரம் தேவையாகும். பெற்ருேருக்கு "X" அடையாள அட்டை இருக்கும் இடத்திலும் அவர்களது வாக்கு விபரம் கொடுபடல் வேண்டும்.

கே: அடையாள அட்டையில் இருக்கும் "X" "V" என்ற எழுத்துக்களின் விளக்கங்கள் என்ன?

ப: "V" எழுத்து இருப்பின் இலங்கைப் பிரஜை என நிருபிக்கப் பட்டுள்ளது. "X" எழுத்து இருப்பின் இலங்கைப் பிரஜை என்பது நிருபிக்கப்படவில்லே.

கே: "X" எழுத்துடன் அடையாள அட்டையை வைத்திருக்கும் இலங்கைப் பிரஜைகள் எவ்விதம் "V" ஆக மாற்றுவது?

ப: "ஊ" படிவத்தில் விண்ணப்பித்தல் மூலம்.

கே: ஒரு முறைக்கு மேல் அடையாள அட்டைக்கு வண்ணப்பித்தல் குற்றமா?

ப: தண்டனேக்குரிய குற்றமாகும். இதை கிராம சேவை அலுவலர்களும், பாடசாலே அதிபர்களும் விண்ணப்பதாரிகளுக்கு விளக்கவேண்டும்

கே: பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் முழு மூலப் பிரதி ஏன் தேவைப்படுகிறது?

ப: மாற்றீடுகளேத் தவிர்ப்பதற்காகவே புகைப்படப் பரதிகள் ஏற்கப்படுவதில்லே மூலப் பிரதியே கேட்கப்படுகின்றது பிறப்பு அத்தாட்சிப் பத்திர முழுப் பிரதியிலேயே விண்ணப்பதாரியின், பிதாவின் முழுப் பெயர்கள், பிறந்த திகதி, பிறந்த இடம், இனம் முதலியன பெறப்படுகின்றன சுருக்கப் பிரதியில் இனம் கொடுபடுவதில்லே இத்தகவல்களின் ஒருமைப்பாடு அடையாள அட்டையிலும் காணப்படல்வேண்டும். ஒன்றிற்கொன்று முரண்பாடாக இருப்பின் அத்தகைய அடடைகளால் பயனில்லே அடையாள அட்டைகளில் 9 இலக்கங்கள் காணப்படுகின்றன. இதில் முதல் இரண்டு இலக்கங்களும் பிறந்த வருடத்தின் கடைசி இரண்டு இலக்கங்களேக் குறிப்பன 1931ம் வருடம் பிறந்த வருடமாயின் முதலிரண்டு இலக்கங்களும் 31 என அமையும். அடுத்து வரும் மூன்று இலக்கங்களும் பிறந்த திகதியைச் குறிக்கின்றன. தை 1ம் திகதியாயின் 001 என அமையும். மார்கழி 31ம் திகதியாயின் 366 என அமையும் ஆகவே வருடத்தில் முறையே 1ம் நாளிலும் 366ம் நாளிலும் பிறப்பு சம்பவித்ததாக அறிய முடிகின்றது. இப்பொழுது முதல் ஐந்து இலக்கங்களேயும் முறையே 31 001 31 எனவும் 366 எனவும் கண்டுகொண்டோம். அடுத்துவரும் மூன்று இலக்கங்களும் அந்தத்தினத்தில் எத்தனேயாவது நபராகப் பதியப்படுகின்ருர் எனக் காட்டப்படுவன. ஒரு தினத்தில் ஒதுக்கக்கூடிய இலக்கங்கள் ஆண்களுக்கு 999ம், பெண்களுக்கு 999ம் ஆகும் ஆகவே இலக்கங்களின் வீண் விரயத்தைத் தடுப்பது மிகவும் முக்கியம். எல்லோரும் தத்தமது இலக்கங்களே ஞாபகமாகவும் கவனமாகவும் பதிந்துவைப்பது அவர்களின் முக்கிய கடமையாகும்.

[மிகுதி நாளே]

## "குற்றமற்றவரை விடுதலே செய்யவும்"

[யாழ்ப்பாணம்]

"கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களே, நீதி விசாரணேக்கு உட்படுத்தி குற்றமற்றவர்களே உடன் விடுதலே செய்யவேண்டும்."

இருபாலே கிழக்கு பிரஜைகள் குழு நிர்வாகக் குழுக் கூட்டம் ஆசிரியர் திரு. எஸ். சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. தொழிலாளர், விவசாயிகளேக் கொண்ட கலந்துரையாடலும் இக்கூட்டத்தில் இடம்பெற்றது.

நாட்டின் இன்றைய நிலேமையைக் கருத்திற்கொண்டு விவசாயிகள் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களே உற்பத்தி செய்வதென்றும்; அந்தக் கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும்உணவுப்பொருட்களே அந்தக் கிராமமக்களுக்கே விற்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. [ரா]


நீகல் மினி
தினசரி 10-15, 1-30
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா நடிக்கும்
அடிமைப்பெண்

நீகல்
தினசரி 10-30, 2-00
AN OFFICER AND A GENTLEMAN
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
36 Chamber of Sholine (KaratteFilm)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-15, 12-15, 2 30
சிவாஜி, கே. ஆர். விஜயா பிரபு நடித்த
நீதிபதி
(கலர்)


## வீதிகள் புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

நீண்டகாலமாக திருத்தப்படாது குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு சீரற்றநிலேயில் இருநதுவந்த வலிமேற்குப்பகுதியைச் சேர்ந்த பிரதான வீதிகள் யாவும் இளேஞர்களின் தீவிர முயற்சியினல் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

போக்குவரத்திற்கு பாதகமாக இருந்துவந்த பாரிய குழிகளுக்கும், குண்டுகளுக்கும் கற்கள் போடப்பட்டு தார் ஊற்றி செப்பனிடப்பட்டுள்ளது,

## புங்குடுதீவு முத்துமாரி இலட்சார்ச்சனே

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் மாசிமக சண்டிகா ஹோமமும் இலட்சார்சனேயும் இம்மாதம் 25ம் திகதிதொடக்கம் அடுத்த மாதம் 6 ம்திகதி வரை நடைபெறும் தொடர்ந்து பத்து நாட்களுக்கு அபிஷேகம், விஷேடபூஜை, இலட்சார்ச்சனே, ஹோமம் நடைபெறும்

மாசிமக ஊர்வலமும் நடைபெறும். சிவஸ்ரீ ஸ்ரீனிவாச நாகேந்திரக் குருக்கள் பிரதம குருவாயிருந்து சண்டிகா ஹோம இலட்சார்ச்சனேகளே நடாத்தி வைப்பார்.

## அச்சுவேலி பிரஜைகள் குழு

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதிக்கான பிரஜைகள் குழுவைத் தெரிவதற்கான பொதுக் கூட்டம் வலிகிழக்கு கமநல சேவை நிலேய பயிர்ச்செய்கையாளர் சங்கத் தலேவரும், அச்சுவேலி பொது மக்கள் சமாதான சபைத் தலேவருமான திரு டி எம். யோசேப் தலேமையில் நடந்தபோது பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலேவர் திரு டி. எம் யோசேப், செயலாளர் வில்விசைக் கலேஞர் கே. என். கணபதிப்பிள்ளே சின்னமணி, பொருளாளர் பிரபல நாடகக் கலேஞர் திரு. இராஜகஜோதி மற்றும் திருவாளர்கள் டி துரைராஜசிங்கம், கே. தம்பிப்பிள்ளே பொ சிவலிங்கம், சி ஜெகதீசன்' ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்னர்.

## அரசின்பாவனேக்கு சுந்தர் காணி

[வவனியா]

வவனியாவிலுள்ள மறைந்த தமிழ்த் தலேவர் அமரர் சி சுந்தரலிங்கத்திற்குச் சொந்தமான லிங்கம்தோட்டக் காணி அரசின் பாவனேக்கு எடுக்கப் படவுள்ளது.

இந்த லிங்கம் தோட்டத்திலேயே சுந்தரலிங்கம் அண்மையில் காலமாஞர் என்பதுகுறிப்பிடத்தக்கது

25 ஏக்சரைக் கொண்ட லிங்கம் தோட்டமாகும். லிங்கம் தோட்டத்திற்கு அருகாமையிலேயே வவனியா ஆயுதப் படை கூட்டுசெயலகம் அமைந்துள்ளது

லிங்கம் தோட்டம் அரசினல் சுவீகரிக்கப்படும் அதே நேரத்தில் பக்கத்து காணியான வவனியா முன்னுள் எம். பி. திரு தா. சிவசிதம்பரத்தின் காணியும் அரசின் பாவனேக்கு எடுக்கப்படலாம் என கருதப்படுகின்றது. (கி)

## லிகிதரும் பலி

[வவனியா]

வவனியா பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் பிரதம காரியாலயத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றும் சிவசுப்பிரமணியம் என்பவரும் புளியங்குளம் கண்ணி வெடிக்குண்டுக்கு பலியாகியுள்ளார்

குண்டு வெடிப்பின் போது இவரும் அந்த பொலிஸ்படையினருடன் ஜீப்பில் வந்துகொண்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

# பாதிக்கப்பட்டவர்களுக்கு செஞ்சிலுவைச்சங்க உதவி

(அச்சுவேலி)

அச்சுவேலியில் கடந்த சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற அசம்பாவிதத்தின் போது ஐம்பதுக்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டது தெரிந்ததே.

வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதால் உடமைகளே இழந்த இவர்கள் உறவினர்கள் இல்லங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களின் பரிதாபநிலேயை உணர்ந்த வலி-கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே கிட்டிணரின் சிபார்சின் பேரில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் இவர்களுக்கு உதவ முன்வந்துள்ளது

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்ட துணிகளும் பாத்திரங்களும் அச்சுவேலி கிராமசேவையாளர் திரு கே எஸ். சோமசுந்தரத்தின் பணிமனேயில் அச்சுவேலி பிரஜைகள் குழுத்தலேவர் திரு. டி எம். யோசேப், செயலாளர் திரு கே. என் கணபதிப்பிள்ளே சின்னமணி ஆகியோரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளுக்கு அச்சுவேலி லயன்ஸ் கழகப் பொருளாளர் திரு கே. கனகராசா சமாதானசபை உறுப்பினர் திரு. டி. துரைராசசிங்கம் ஆகியோரும் சமூகம் கொடுத்திருந்தனர்.

## மோட்டர் திருட்டு

[பண்டத்தரிப்பு]

காங்கேசன்துறை மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலேயின் நீர் இறைக்கும் மின்சார [யந்திரம்] மோட்டர் திருடப்பட்டுள்ளது.

பூட்டப்பட்டிருந்த அறைக் கதவை உடைத்து மேற்படி மின்சார மோட்டரை களவாடிச்சென்றுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது


HOME FINANCE LTD
ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
யாழ்ப்பாணம்

பூகொடை ஆலேயில் தயாரித்த நவீன ரக சீத்தை-பப்ளின், பிசாமா போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனேக்கு உண்டு. சகாய விலே. விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவுசெய்யவும்

NO. 82, KANNATHIDDY ROAD, JAFFNA.

சர்வதேச இளேஞர் ஆண்டு 1985

கிளிநொச்சி மாவட்டம்

மேற்படி வைபவத்தையொட்டி இடம்பெறும் இலக்கியப் போட்டியில் கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகியனவற்றிற்கான ஆக்கங்கள் 15—30 வயதிற்குட்பட்ட இளேஞர் - யுவதிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

நுழைவு முடிவுத் திகதி 10-3-1985.

மேலதிக விபரங்கட்கு கீழ்க் குறிப்பிடும் முகவரியில் உடன் தொடர்புகொள்க.

மாவட்ட இளேஞர் சேவை அதிகாரி,
செயலர்/சர்வதேச இளேஞர் ஆண்டு
செயற் திட்டக் குழு,

தேசிய இளேஞர் சேவைகள் மன்றம்,
கிளிநொச்சி மாவட்டம்,
கண்டி வீதி - பரந்தன்.

2002

ரெருசோ ஷிப்ஸ்
TERRAZZO CHIPS
IMPORTED

★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLAND)
★ அலுமினியம் தகடுகள் (18g x 16g)
★ வெள்ளேச் சீமெந்து
★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம்

Rs. 55/-க்கு மேல்

றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலேபேசி: 34411 — 31511

## பரீட்சையைக் குழப்பி

# “கல்வியைப் பாழடிக்கும் முயற்சி வேண்டாம்”

(யாழ்ப்பாணம்)

அடுத்த சில தினங்களில் ஆரம்பமாகும் க. பொ. த. (சாதாரண) பரீட்சையை ஒழுங்காக நடத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

''எமது இலட்சியத்துக்கும் இப்பரீட்சையை குழப்புவதற்கும் இடையில் எவ்விததொடர்பும் இருப்பதாக நாம் கருதவில்லை. அநாவசியமான முறையில் எவரும் எமது மாணவர்களின் கல்வியில் தலையிட்டு அவர்களது கல்வியை பாழடிக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டாம் என பகிரங்கமாக வேண்டுகிறோம்.

''இங்ஙனம் அநாவசியமான தலையீடுகள் எமதுஇறுதி இலட்சியத்தை அடைவதற்கும் குந்தகமாய் அமையும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

## 'உலக கிண்ணக் கிரிக்கெட்'

## பாகிஸ்தான் வெற்றி!

மல்பேர்ன், பெப். 24

மல்பேர்னில் நடைபெற்று வரும் 'உலகக் கிண்ணக் கிரிக்கெட்' போட்டியில் அவுஸ்திரேலியாக் குழுவை பாகிஸ்தான் கோஷ்டி தோற்கடித்தது.

பாகிஸ்தான் கோஷ்டி இப்போட்டியில் 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 262 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலியா சகல விக்கெட்டுகளையும் இழந்து 200 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இவ்வெற்றியின் நிமித்தம் 'ஏ' பிரிவில் பாகிஸ்தானும் இரண்டு புள்ளிகளைப் பெற்றுள்ளது. (வி)

## நாட்டியக்கலைஞர் காலமானார்

சென்னை, பெப். 24

பிரபல நாட்டியக் கலைஞர் சொர்ணசரஸ்வதி காமானுர். இவருக்கு இறக்கும்போது 70 வயதாகும். இவர் பிரபலநாட்டியக கலைஞா பால சரஸ்வதியின் நெருங்கிய உறவினராவார்.

## ராஜஸ்தானில் பொலிஸ்—பொதுமக்கள் மோதல்

# 6 பேர் பலி - நகரில் ஊரடங்கு

புதுடில்லி பெப். 24

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள லீக் நகரில் பொலிசாருக்கும் பொது மக்களுக்குமிடையே இடம் பெற்ற மோதலில் 6 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்நகரில் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் சட்டசபைத் தேர்தலில்சுயேச்சைவேட்பாளராகப் போட்டியிடவிருந்த திரு மான்சிங்கும் அவரின் இரு ஆதரவாளர்களும் பொலிசாரினுல் கொல்லப்பட்டதையடுத்தே, இம்மோதல் இடம் பெற்றதாகக் கூறப்பட்டது.

## இன்னும்திருப்பித் தரப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

சில தினங்களுக்குமுன் கடத்தப்பட்ட வ. போ. ச. தலைவர் திரு. எஸ். கனகரத்தினத்தின் உத்தியோக காரும், சட்டத்தரணி க. கேசவனின் காரும், முன்னுள் கோப்பாய் எம். பி. திரு பி. ஆலாலசுந்தரத்தின் ஜீப்பும் இதுவரை திருப்பிக்கிடைக்கவில்லை.

இனந்தெரியாதவர்கள் இவ் வாகனங்களை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றதாக கூறப்பட்டது. (க)

## வடக்குக் கிழக்கில்

# இந்த ஆண்டில் 6000 சிங்களக் குடும்பம்

## குடியமர்த்த ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இந்த ஆண்டு 6000 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படுவார்கள்.

அரசாங்கத்தின் உத்தேச திட்டத்தின்படி 30,000 சிங்களக் குடும்பங்களை இந்தஆண்டு குடியேற்றுவதில் பல்வேறு சிரமங்கள் இருப்பதினுல் 6000 குடும்பங்கள் மாத்திரம் இவ்வாண்டு குடியேற்றப்படுவர்.

ஏனைய குடும்பங்கள் அடுத்து வரும் ஆண்டுகளில் படிப்படியாக குடியேற்றப்படுவர்.

இவர்களது குடியேற்றம் தொடர்பாக தனியான அமைச்சு அமைக்கப்படாது என்றும் காணி, காணி அபிவிருத்தி அமைச்சே இதற்குப் பொறுப்பாக இருக்குமென்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## வேலணை ப நோ. கூ. சங்கம்

(வேலணை)

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு. நாகரெத்தினம் பாலச்சந்திரன் சென்ற வியாழக்கிழமை இரவு இனம்தெரியாத சிலரால் கடத்திச்செல்லப்பட்டதையடுத்து வேலணை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் இரு தினங்களாக பூட்டப்பட்டிருந்தபோதிலும் மக்கள் கஷ்டங்களை போக்கும் விதத்திலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினர் பாவனைப் பொருட்களை வினியோகிப்பதற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை சங்கத்தைத் திறந்து பொருள் விநியோகத்திற்கு ஏறபாடு செய்திருந்தனர்.

சங்கத் தலைமைக் காரியாலயம் உட்பட சகல கிளைகளும் திறந்து வைக்கப்பட்டிருந்தன. கடத்தப்பட்டவர் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

# தீயணைக்கும் படை இம் மாத இறுதியில்வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் தீயணைக்கும் படை இம்மாத இறுதியில் யாழ்நகர் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததீயணைக்கும்படை பொறுப்பேற்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பாதுகாப்பாகக் கொண்டுவருவதற்கான ஏற்பாட்டை யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் மேற்கொண்டுள்ளார்.

தீயணைக்கும் படையை இங்கு கொண்டு வருவதற்கும், அதனை பராமரிப்பதற்கும், தேவையான பாதுகாப்பு வழங்குமாறு எல்லாத் தரப்பு மக்களிடமும் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

## 260 தமிழ் அகதிகள் தர்மபுரியில் குடியேறுவர்

(வேதாரணியம்)

இலங்கையிலிருந்து ஒரு பெண், ஒரு குழந்தை உட்பட 10 தமிழர்கள் அகதிகளாக கடந்தவெள்ளிக்கிழமை வேதாரணியம்வந்து சேர்ந்தனர்.

இவர்களுக்கு போதியஉணவு வசதியும், இருப்பிட வசதியும் அளித்த தஞ்சாவூர் மாவட்ட வருவாய் துறை அதிகாரிகள் இவர்களை மண்டபம் முகாமுக்கு அனுப்பி வைத்தனர்.

இதனிடையே இலங்கையில் இருந்து அகதிகளாக தாயகம் வந்திருக்கும் 54 குடும்பங்களைச் சேர்ந்த 261 பேர் மண்டபம் முகாமிலிருந்து தர்மபுரிமாவட்டத்தில் குடியேற்றப்படுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைக் குடியேற்றுவதற்கான சகல ஏற்பாடுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மாதவன் நம்பியார் மேற்கொண்டு வருகிறுர். [சூ]

## பரீட்சையைக் குழப்ப அனுமதிக்கக்கூடாது!

### வடமராட்சி மாணவர் ஒன்றியம் கோரிக்கை

(கரவெட்டி)

''தமிழ் பிரதேசங்களுக்கு ஒரே ஒரு மாணவர் ஒன்றியமே இருக்க வேண்டும்'' என்று வடமராட்சி மாணவர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

தற்போது நடைபெறவுள்ள பரீட்சையைக் குழப்ப முனைய எவரையும் அனுமதிக்காதது டன், அப்படிக்குழப்புபவர்களை அம்பலப்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் எனவும் அது வேண் ோள் விடுத்துள்ளது.

''மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடாது என கருதினுல், அதனை மாணவர்கள் முன்வைத்து அவர்களின் சுயமான முடிவுக்கே விட்டுவிட வேண்டும். அதை விடுத்து வன்முறையைப் பாவித்து மாணவர்களைப் பரீட்சை எடுக்க முடியாதவாறு குழப்புவதுவிரும்பத்தக்கதல்ல எனவும் அறிவித்துள்ளது.

## 'வாசு'வை விடுவிக்க கோரிக்கை

[கொழும்பு]

''நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவா நாணயக்காரவை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவும்''

இவ்வாறு கோரும் கடிதமொன்றை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. கே. பி. சில்வா ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுக்கு எழுதியுள்ளார்.

## மரண அறிவித்தல்

### கனகசபை ஞானச்சந்திரன்

திரு. கனகசபை ஞானச்சந்திரன் (அரசாங்க அதிபர் முல்லைத்தீவு) சிவபதமடைந்துள்ளார், அன்னுர் சாவகச்சேரியைச் சேர்ந்த இளைப்பாறிய தபாலதிபர் கா. கனகசபை, திருமதி கனகசபை அவர்களின் அன்பு மகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் சுபோதினி, அமுதினி நளாயினி, றஜினி, கேதீஸ்வரி, அரவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னுரின் ஈமக்கிரியைகள் சாவகச்சேரியில் இன்று திங்கட்கிழமை (25-2-85) பிற்பகல் மூன்று (3) மணிக்கு நடைபெறும்.

உறவூர், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

பொலிஸ் நிலைய வீதி, சாவகச்சேரி. (2005)

## ஞானச்சந்திர...

[1ம்பக்க ம் கலத்தொடர்ச்சி]

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இருந்து திரு. ஞானச்சந்திரனின் சடலம் அவரது சொந்த இ ட ம ா வ சாவகச்சேரிக்கு நேற்றுப் பிற்பகல் கொண்டு வரப்பட்டது.

இம்மரணம் தொடர்பாக கிளிநொச்சி நீதவான் கே. பாலச்சந்திரன் விசாரணைகளை மேற்கொண்டார்

52 வயது நிரம்பிய ஞானச்சந்திரன் 5 பெண்பிள்ளைகளுக்கும், ஒரு ஆண்பிள்ளைக்கும் தந்தையாவார்.

சட்டத்தரணியான திரு. ஞானச்சந்திரன் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மூதூர் ஆகிய இடங்களில் நீதவானுகவும், யாழ். பதில் மாவட்ட நீதிபதியாகவும் கடமையாற்றினுர்.

நீதவானுக சுமார் ஐந்து வருடகாலம் பணியாற்றிய பின் முல்லைத்தீவு அரசாங்க அதிபராகப் பதவி ஏற்றுர்

திரு. ஞானச்சந்திரனின் இறுதிக் கிரியைகள் இன்று சாவகச்சேரியில் நடைபெறும் என அறிவிக்கப்படுகின்றது. (க)

## பிராந்தியத்தில்

1-ம்பக்கம் 3ம் கலத்தொடர்ச்சி

ரத்ன கடந்த வாரம் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ரமேஷ்பண்டாரியை மூன்று முறை சந்தித்துப் பேசுவார்த்தை நடத்தினுர்.

இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வு காணும் பொருட்டு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏதாவதொரு முயற்சியை இலங்கை அரசு எடுத்தே தீரவேண்டுமென்றும் ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவிடம் இந்திய அரசு வற்புறுத்திக் கேட்டுள்ளது என்று கூறப்பட்டது.

இந்தியாவில் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு பயிற்சியளிக்கப்படுவதாக அண்மையில் இலங்கை ஜனுதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனு தெரிவித்த கூற்றுக்கும் இந்திய அரசு இலங்கைத் தூதுவர் திரு. பேர்ணுட் திலகரத்னுவிடம் அதிருப்தி தெரிவித்துள்ளது என்றும் தீவிரவாதிகள் எவருககும் இந்தியா உதவவில்லையென்றும், இலங்கையில் அமைதியும், சௌஜன்யமும் நிலவ வேண்டுமென்பதே இந்திய அரசின் விருப்பமென்றும் வற்புறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது

திரு. பேர்ணுட் திலகரத்னு இலங்கை ஜனுதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுடனும், மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களுடனும் இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வு காணும் யோசனைகள் குறித்து ஆலோசனை நடத்திவிட்டு அடுத்தவாரம் புதுடில்லி திருப்புவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கண்களை...

[1-ம்பக்க-5ம்கலத்தொடர்ச்சி]

நேற்றுப் பிற்பகல் யாழ். பொலிஸ் நிலையத்திற்குசென்று வாக்குமூலமளித்தார்.

தங்களைக்கடத்தியவர்கள் முதலில் முகம் குப்புறப்படுக்கும் படி கட்டளையிட்டதாகவும் பின்னர் கண்களைக்கட்டி ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்றதாகவும் அங்கு தம்மை ஒரு அறையில் விடுத்து திரு. ஞானச்சந்திரனை வேறு அறைக்கு அழைத்துச் சென்றுர்கள் என்று திரு. கிருபதலகன் கூறியிருப்பதாகத் தெரிகின்றது. வீட்டில் தமக்கு படுக்கவசதியும் பெட்ஷீட்டும் கொடுத்தனர் என்றும் சிகரட் கேட்டபோது அவைகளையும் வழங்கினுர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பின்னர் மீண்டும் தமது கண்கள் கட்டப்பட்டு வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றுர்கள் என்றும் ரயில் நிலையத்துக்கருகில் இறக்கிவிடப்பட்டதாகவும் திரு. ஞானச்சந்திரன் பற்றி கேட்டபோது அவர் வேறு இடத்தில் விடுவிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டதாகவும் கூறியுளளார் என்று தெரிகின்றது.

## மல்லாகம் நீதிமன்றில்

[மாவிட்டபுரம்]

மல்லாகம் நீதிமன்றத்தில் பலவார இடைவெளியின்பின் சட்டத்தரணிகள் கலந்து கொண்டனர். இந்நீதிமன்றத்தில் வழக்குகளை சட்டத்தரணிகள் கடந்த சில வாரங்களாகப் பகிஷ்கரித்து வந்தனர்.

தமபகிஷ்கரிப்பை கைவிட்டு கடந்த 21-ம் திகதி நீதிமன்றத்தில் அவர்கள் சமுகமளித்தனர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இவன்கோவில் மேற்கு வீதி, 53ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone um 22nber389-24126.